மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், நீடாமங்கலம்

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி (முழு கூடுதல் பொறுப்பு)

2023 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30 ஆம் நாள் புதன்கிழமை

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீ சோபகிருது வருடம் ஆவணித்திங்கள்13 ஆம் நாள்

**இடைநிலை மனு எண். 473/2022 -ல்**

**அசல் வழக்கு எண். 53/2021**

1. பாப்பையன்

2. பூங்கொடி ...மனுதாரர்கள் / வாதிகள்

// **எதிர்**//

திருஞானம் ...எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு 28.07.2023 ம் தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. கதாக பொற்செழியன் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. உதயகுமார் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது அசல் வழக்கில் சொத்து விபரத்தில் உரிய திருத்தம் செய்துகொண்டு இடைநிலை மனுவினை மேல் நடத்த உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 6 விதி 17-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :-**

இம்மனுவின் மனுதாரர் 1ம் மனுதாரர். 2 ம் மனுதாரர், மனுதாரரின் சகோதரி

ஆவார். மனுதாரர்களால் எதிர்மனுதாரர்/பிரதிவாதி மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு உள்ளிட்ட இதர சொத்துக்கள் மனுதார்களின் தகப்பனார் பெயருக்கு அரசால் பட்டா வழங்கப்பட்டு மனுதாரர்களின் தகப்பனார் தங்கவேலால் அனுபவம் செய்யப்பட்டு வரப்பட்டு, தங்கவேல் இறப்பிற்கு பிறகு வாரிசுகள் என்ற முறையில் மனுதாரர்கள் அனுபவம் செய்து வருகிறார்கள். எதிர்மனுதாரர்/பிரதிவாதி தகராறு செய்து வருகிறார். 1வது அயிட்ட சொத்தான புல எண். 284/12-ஐ பொறுத்து மனுதாரர்கள், எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்க இடையே பிரச்சனை இருந்து வருவதால் அவர் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கு தாக்கல் செய்யும் பொழுது மனுதாரர்களின் தகப்பனாருக்கு பட்டா வழங்கப்பட்ட இதர புல எண்களையும் சொத்து விபரத்தில் தவறுதலாக குறிப்பிடப்பட்டுவிட்டது. மேற்படிவிபரம் வருடாந்திர ஆய்வறிக்கையின்போது மற்ற புல எண்களுக்கான நான்கெல்லை விபரம் குறித்து குறிப்பாணை வழங்கிய பின்னரே தெரியவந்தது. இது வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ ஏற்பட்டதல்ல. மேற்படி புல எண்ணைத்தவிர மற்ற புல எண்களை பொறுத்து அசல் வழக்கில் இருந்து நீக்கம் செய்துகொள்ள உத்தரவிடக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 3. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவானது நிலைநிற்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்படுகின்ற சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்கவேண்டும். வாதிக்கும், பிரதிவாதிக்கும் பிரச்சனை உள்ளது 52 குழி நிலம் மட்டுமே 284/12 ஆகும். தாவா சொத்தை குறித்து பிரதிவாதி ஏற்றதை

ஆற்றுக பரிகாரம் கோரி வாதிகள் மீது 52/2021 வழக்கு தாக்கல் செய்துள்ளார். ஆனால், வாதி பிரச்சனைக்கு சம்மந்தமில்லாத 348/8, 348/9 ஆகிய இரண்டு புல எண்களை சேரத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த இரண்டு சொத்துக்களுக்கும், வழக்குகளுக்கும் சம்மந்தம் கிடையாது. வேண்டுமென்றே வழக்கை திசை திருப்ப வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வாதி உரிமை கோரும் மூன்று சொத்துக்களில் எந்த சொத்து பிரதிவாதியிடம் வசம் உள்ளது தெரியாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். 1991-ம் ஆண்டிலிருந்து இந்த பிரதிவாதி அனுபவத்தில் உள்ள சொத்தை பொருத்து காலாவதியாகி உள்ளது. வழக்கு விசாரணைக்கு பிறகு வழக்கை திருத்த மனு தாக்கல் செய்திருப்பது காலாவதி ஆகி உள்ளது. எனவே, இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை ஆகும்.**

**பிரச்சினை**:-

1. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

2. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

3.மனுவினை பரிசீலிக்கும்போது அசல் வழக்கானது எதிர்மனுதாரர் /பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, பிரதிவாதியால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு இருதரப்பு விசாரணைக்காக போடப்பட்டிருந்தபோது வருடாந்திர

ஆய்வறிக்கையின்போது மற்ற புல எண்களுக்கான நான்கெல்லை விபரம் குறித்து குறிப்பாணை வழங்கப்பட்டுள்ள பிறகே தெரியவந்ததால் புல எண்ணைத்தவிர மற்ற புல எண்களை பொறுத்து அசல் வழக்கில் இருந்து நீக்கம் செய்துக்கொள்ளவேண்டும் என்று மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

மேலும், இவ்வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலிக்கையில் வழக்கானது விசாரணை துவங்கப்படாத சூழ்நிலையில் இருக்கிறது. இம்மனுவினை அனுமதிப்பதே இவ்வழக்கிற்கு பொருத்தமானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எந்த வித இழப்பும் ஏற்படப்போவதில்லை. எனவே, நீதியின் நலன் கருதி இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவில்,** இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு எனனால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (30.08.2023) அவையறியப் பகரப்பட்டது.

(S/d-.A.Seethalakshmi),
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி(மு.கூ.பொ)

**குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்**

**இருதரப்பிலும்** : இல்லை

(S/d-.A.Seethalakshmi),
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி(மு.கூ.பொ)